www.padippakam.com

# ஏழைதாசன்

O 10—2
O அக்டோபர் '2001
O இதழ் எண் : 92
O விலை ரூ. 3/-

- திங்கள் இலக்கிய இதழ் -

☐ எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் — கண்ணதாசன்

சிறிய கையெழுத்து இதழ்!
அரிய மெய்யெழுத்து இதழ்!



இருபது ஆண்டுகளாக இடைவிடாது இதழ் நடத்தி, இருநூறாவது இதழை அண்மையில் வெளியிட்டு அரும்பெரும் சாதனையை ஆர்ப்பாட்டமின்றி அமைதி புரட்சி செய்து இளம் பத்திரிகையாளருக்கு வழிகாட்டியாக விளங்கும் இவரது சேவை தமிழன்னைக்கு மற்றொரு மகுடம்—ஆ-ர்.

மருத்துவர்
**எம்.எஸ். கோவிந்தராஜன்**
ஆசிரியர்,
**தாழம்பூ**
சுப்பிரமணியபுரம் - 614 805,

படிப்பகம்

www.padippakam.com

# எய்ட்ஸ் நோயா? பயம் வேண்டாம்!

எய்ட்ஸ் தீர்க்க முடியாத ஒரு நோய் அல்ல. சித்த மருத்துவத்தில் குணமாகிறது. எய்ட்ஸ் என்று உறுதி செய்யப்பட்ட மருத்துவச் சான்றுகளுடன் வர வேண்டும்.

**நோயின் தன்மையைப் பொருத்து 100 முதல் 200 நாட்கள் வரை மருந்துகள் சாப்பிட வேண்டும். நடமாட்டம் இல்லாதவர்களை அழைத்து வர வேண்டாம்.**

**H.I.V.** கிருமிகள் முழுமையாக அழிக்கப்படும் வரை சிகிச்சை அளிக்கப்படும். மருந்துகள் சாப்பிட்டு முடித்த பின்பு 'P 24 ஆன்டிஜென்டெஸ்ட்' என்ற ரத்தப் பரிசோதனை செய்து பார்க்கவும். நெகட்டிவ் ஆக மாறும். இப்பரிசோதனை முறையே போதும். வெஸ்ட்ரன் பிளாட் பரிசோதனையில் நெகட்டிவ் ஆக வேண்டுமென்று விரும்புபவர்கள் தொடர்ந்து சிலகாலம் மருந்துகள் சாப்பிட வேண்டும்.

மருத்துவத் துறையில் 45 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக பணி ஆற்றியவர். 73 வயது நிரம்பியவர். அரிமா இயக்கத்தில் 'எய்ட்ஸ் நோய் பிரிவிற்கு' மதுரை மாவட்டத்திற்குத் தலைவராய் இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டன் நாடுகளுக்குச் சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர்.



சித்த மருத்துவ மேதை :

**அரிமா டாக்டர் A.தேவராஜன், R.M.P.(IND)C.B.I.M.**

"எய்ட்ஸ் நோய் ஒழிப்பு மருத்துவ மையம் "7-3/125 பெருமாள் கோவில் தெரு, பேரையூர் - 625 703.

(மனோன்மணி ஆஸ்பத்திரி) மதுரை மாவட்டம் போன் : 04549 - 25695

குறிப்பு : பேரையூரில் 7-3/125, பெருமாள் கோவில் தெருவில் மட்டுமே எனது மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. வேறு எங்கும் கிளைகளோ, ஏஜெண்டுகளோ கிடையாது. தரகர்கள் யாரும் என் பெயரைச் சொல்லி அழைத்தால் ஏமாந்துவிடாதீர்கள். ஆட்டோ டிரைவரிடம் 'மனோன்மணி ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும்' என்று சொன்னால் அழைத்து வந்து விடுவார்கள்.

**மருத்துவ ஆலோசனைக்கும், பதிவிற்கும் கட்டணம் ரூ.25/- கட்டணமின்றி வரும் கடிதங்களுக்கு பதில் வராது.**

**பேரையூர் வருவதற்கு வழி :** மதுரை To சாப்டூர் பஸ் மார்க்கத்தில் பேரையூர் உள்ளது. வடக்கிலிருந்து வருபவர்கள் மதுரை வந்து பழங்காநத்தம் பஸ் ஸ்டாண்டிலிருந்து புறப்படும் 'சாப்டூர்' பஸ்ஸில் ஏறி T.கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம். தெற்கிலிருந்து வருபவர்கள் விருதுநகர் பஸ் ஸ்டாண்டிலிருந்து கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம்.

படிப்பகம்

www.padippakam.com

● தொலைபேசி செய்தி - 1

# கவிஞர். அப்துல்ரஹ்மான்

வணக்கம். நான்தான் அப்துல்ரஹ்மான் குவைத்தில் இருந்து பேசுகிறேன் உங்களது ஐக்கூ-200 சிறப்பிதழ்களை திரு சர்தார் உசேன் தந்தார். எல்லோருக்கும் விநியோகம் செய்து விட்டேன். இ மெயிலில் கடிதம் அனுப்ப முயற்சித்தும் முடியவில்லை. உங்கள் முயற்சி ஒரு சாதனை சார். மாதந் தோறும் ஏழைதாசன் இதழ் பெற எங்களால் முடிந்தளவு ஏற்பாடு செய்கிறோம். ஐக்கூ-200, 2000, 2, 00000, 2, 000000 ஆக பெருகி தமிழுக்கு அணி செய்யட்டும் இன்னும் சில தினங் களில் உங்கள் முகவரிக்கு எமது தமிழ்க் கவிஞர் மன்றம் சார்பா கவும் வேறு பலரும் கடிதங்கள் அனுப்புவார்கள். துளிப்பாத் தொகுப்பை இங்குள்ள அனைவரும் பாராட்டுகிறார்கள். ஒரு இந்தியனின் கனவு கவிதைத் தொகுப்பு படித்தீர்களா? எப்படி இருந்தது? பெருங்கவிஞர் வா மு. சேதுராமன் தலைமையில் நடந்த கவியரங்க வீடியோ கேசட் எனது தம்பியிடம் கேட்டு வாங்கி பார்த்து மகிழுங்கள். இனி அடிக்கடி போன் செய்வேன் நன்றி, வணக்கம்.

# குறித்துக் கொள்க போன் : 29532

இனிய நண்பர் ஜபருல்லா புதுக்கோட்டையில் தொலை பேசி தொடர்பகம் வைத்துள்ளார். அவரது தொலைபேசி எண்ணை நண்பர் திரு. சர்தார் உசேன் (குவைத்) அவர்கள் வசம் தந்திருந்தேன். அவரிடம் பெற்று தொலை பேசிய நண்பர்களுக்கு நன்றி. வெளிநாட்டுத் தமிழன்பர்கள் மட்டும் இரவு 9 to 10 மணிக்குள் 29532 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு ஆசிரியரோடு பேசலாம்.

படிப்பகம்

www.padippakam.com

● தொலைபேசி செய்தி - 2

## கவிஞர். அறந்தை மாரிகுமார்

வணக்கம். குவைத்திலிருந்து நான் அறந்தை மாரிகுமார் பேசுகிறேன். பல தடவை முயற்சி செய்து இப்போதுதான் தொடர்பு கொள்ள முடிந்தது. உங்களோடு பேசுகிற இந்நாள் வாழ்வில் இனிய நாள். இந்த வாய்ப்பை மறக்கவே முடியாது. கவிஞர் அப்துல்ரஹ்மான் ஐக்கூ-200 இதழ் கொடுத்தார். படித்துப் பார்த்தேன். அற்புதமான கவிதைத் தொகுப்பு. உங்கள் தமிழ்ப் பணியை பாராட்ட வேண்டியே போன் பேசுகிறேன். இங்குள்ள 50, 60 கவிஞர்கள் படித்துப் பார்த்து அசந்து போனோம். எவ்வளவு அழகான சிந்தனைகள்.... எவ்வளவு அருமையான கவிதைகள்... இப்படியெல்லாம் எப்படி சார் உங்களால் பணியாற்ற முடிகிறது? குவைத் தமிழக் கவிஞர் மன்றத்தினர் அனைவரும் உங்களைப் பாராட்டுகின்றோம். ஏழைதாசன் ஏட்டுக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்ய தயாராய் உள்ளோம். தமிழுக்காக உயிரைத் தரவும் தயாராய் இருக்கிறேன். நாங்களெல்லாம் தமிழகம் வர உள்ளோம். சிவகங்கையில் ஒரு நூலகம் திறக்க உள்ளோம். உங்கள் ஆதரவு எங்களுக்குத் தேவை. எனது சொந்த ஊர் அறந்தாங்கிதான். ஊர் வந்ததும் நிச்சயம் உங்களை சந்திப்பேன். மீண்டும் உங்கள் தமிழ்ப்பணியை தலைதாழ்த்தி வணங்குகிறேன்; வாழ்த்துகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

☐ அ. அருள்மொழிவேந்தன்
புதுக்கோட்டை - 1.

# சிநேகிதி

சந்திக்கும் போதெல்லாம்
போலியான் உருவங்களைத் தரும்
ஒப்பனை.

எதற்காயினும்
கோபமே
வராதவளைப் போன்ற
ஒரு புன்னகை.

எப்போதும்
சுயவிருப்பு - வெறுப்பு
இல்லாதவளைப் போன்ற
நிசலனமான முகம்.

முரண்பாடில்லாத
துணையாகக் காட்ட
எதிர்ப்பே இல்லாத
வார்த்தைகள்...

இவையெல்லாம் இல்லாத
மெய்யான
நீ...
வேண்டுமெனக்கு
கிடைப்பாயா?

படிப்பகம்

www.padippakam.com

# (விமர்சன) மடல் - 2

ஐக்கூ-200க்கான விமர்சன மடல்-1 படித்தேன். ஐக்கூ-200 தொகுப்பு குறித்து விமர்சனம் எழுதலாமே தவிர, ஐக்கூ-200 சிறப்பிதழை மதிப்பீட்டாளரின் தேர்வு குறித்து விமர்சனம் செய்வது ஏற்புடையதல்ல.

இன்று விமர்சனம் என்பது தன் வட்டத்தைச் சேர்ந்தவர்களின் எழுத்தைப் போற்றிப் பாடுவதும், தன் கருத்துக்கு — இலக்கியப் போக்குக்கு எதிராக எழுதுபவர்களை விமர்சனம் என்ற பெயரில் தூற்றுவது என்பதாகவே உள்ளது.

இச்சூழலில் — 'ஏழைதாசன்' ஆசிரியர் ஐக்கூ-200 சிறப்பிதழுக்கு மதிப்புரைச் செய்ய தகுதியானவர் எனக் கருதிய விஞ்ஞானி நெல்லை சு முத்து, ஐக்கூவின் தன்மை, அது கையாளப்படும் விதம் குறித்து தனது மனதிற்குபட்ட கருத்தை கண்ணியத்துடனும் நேர்மையாகவும் பதிவு செய்து உள்ளார். அவர் கவனிக்காமல் விட்ட வரிகள் என சில ஐக்கூவை சுட்டிக் காட்டுவது சரியல்ல. நல்ல ஐக்கூக்கள் அனைத்தையும் சுட்டிக்காட்டவும் முடியாது.

ஒவ்வொருவருக்கும் ஒரு வகையான பார்வை உண்டு. ஐக்கூவை கரைத்து குடித்தவர்களிடம் மதிப்புரைக் கேட்டால் 'இதில் ஒன்றுகூட ஐக்கூ இல்லை' என்றும், இப்படி இருந்தால்தான் ஐக்கூ என்றுகூட விளக்கம் தரலாம். ஐக்கூ எழுதும் புதியவர்களை வளர்ப்பவரிடம் மதிப்புரை கேட்டால், இதில் பெரும்பான்மையான கவிதைகள் சிறந்த ஐக்கூவிற்கான அடையாளம் இருப்பதாகக் கூறலாம்.

எனக்கு சிறப்பான ஐக்கூவாக தெரிவது கவிஞர் இசட்கான் அவர்களுக்கு சாதாரணமாக தெரியலாம். எனவே, மதிப்புரைக்கு விமர்சனம் எழுதுவது சரியா என கவிஞரும், ஆசிரியரும் யோசிக்கட்டும்.

**— சோலை. இசைக்குயில்**
உதவி ஆசிரியர், 'ஹைக்கூ' இதழ்
சோலையார்பேட்டை, வேலூர் (மா)

படிப்பகம்

www.padippakam.com

# ஐக்கூ வாசகர் வட்டம்

★ பல்வேறு இடங்களில் இருந்தும் ஐக்கூ எழுதுகிற 200 கவிஞர்களின் எழுத்துக்களை சேகரித்து, தேர்ந்தெடுத்து, தொகுத்து வெளியிட்டிருப்பது பாராட்டுதலுக்கு உரிய சாதனைதான். பலவிதமான மனப்பண்போடும் சமூக உணர்வோடும் கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. மனிதர்கள், சமூக நிலைமைகள் குறித்த விமர்சனங்களாக அநேக கவிதைகள் அமைந்துள்ளன. ஏழைதாசனின் முயற்சிக்கும் உழைப்புக்கும் நல்ல வெற்றிதான் என் வாழ்த்துகளும் பாராட்டுகளும்.

— முதுபெரும் எழுத்தாளர் **வல்லிக்கண்ணன்**

★ ஐக்கூ — 'குறும்பா' — தொகுப்பு நூல் கிடைத்தது. மிகவும் மகிழ்ந்தேன். பலரையும் இணைத்துக் குறும்பாத் தொகுப்பு நூல் ஆக்கியுள்ளது வாழ்த்துதற்குரியது. இன்றைய 'பா'வினைஞர்கள் எதிர்மறையாகக் காணுகிறார்களேயொழிய — சூழலை இலக்கியமாகவோ, நுணுகியோ காணுவதில்லை. இதுவர — காலம் கடந்து நிற்கும். தங்களின் தொகுப்புச் செயல் வாழ்த்துதற்குரியது.

— சிற்றிதழ் சேகரிப்பாளர் **பொள்ளாச்சி நசன்**

★ ஒவ்வொரு மாத ஏழைதாசனும் இலட்சாதிபதியாக திகழ்கிறான். அத்துடன் இருநூறு ஐக்கூ பாவலர்களைக் கொண்டு தாங்கள் செதுக்கியுள்ள சிற்பக்கலை கோபுரத்தின் கலசங்களாகத் திகழ்வது இறுதியாகவுள்ள (எண் 200) ஏழைதாசன் கவிதையே.

— திரைப்படக் கவிஞர் **சேலம் ஆறுமுகன்**

★ ஏழைதாசனுக்கு புதுவை தமிழ்நெஞ்சனின் வணக்கம். வெளிநாட்டில் இருந்தெல்லாம் துளிப்பா வருவதும் — இதழ் பரவலாக செய்தியை கொண்டு செல்வதும் சிறப்பாக இருக்கிறது. துளிப்பா தொகுப்பு முயற்சியில் தொடர்ந்து 50—100—200 என்று சாதனை செய்துவரும் தங்களை பாராட்டுகிறேன். தங்களின் பணி தொடர என்றும் துணை நிற்க விரும்பும்

— **புதுவை தமிழ்நெஞ்சன்**

★ இரண்டாவது முறையாக 'ஐக்கூ' சிறப்பிதழ் வெளியிட்டு நல்ல தொண்டு புரிந்துள்ளீர்கள். இனிய கவிதைகள் மட்டுமல்ல; சிந்தனையைத் தூண்டும் கவிதைகளும் ஏராளம். இந்திய விஞ்ஞானி நெல்லை சு. முத்து அவர்களின் அணிந்துரை இதழுக்கு மகுடம் தோழமை இதழ்களில் 'இலக்கியச் சிறகை'யும் இணைத்தமைக்கு சிறப்பாக நன்றி நவில்கிறேன். பொருளாதார உதவி செய்ய ஆவல். இயலாத நிலை.

— 'இலக்கியச் சிறகு' **மு. இராமலிங்கம்**

படிப்பகம்

www.padippakam.com

# ஐக்கூ வாசகர் வட்டம்

## த.சி.ச (தாஸ்னர்) செயலர் **வதிலை பிரபா**

'ஏழைதாசன்' — புதிய ஐக்கூத் தொகுப்பு ஒரு மைல்கல். அற்புதமாயிருந்தது. ஐக்கூ கவிதைகளுக்கு எந்த அளவு ஆதரவு உள்ளது என்பதை தங்கள் தொகுப்புகள் மூலம் உணரலாம். இந்த அளவுக்கு அதிக எண்ணிக்கைகளில் ஐக்கூ கவிதையாளர்கள் உள்ளனர் என்பது மனதுக்கு மகிழ்ச்சியாக உள்ளது. தங்களின் ஐக்கூச் சேவை தொடர வாழ்த்துக்கள்.

## 'அன்றில்' சிறப்பாசிரியர் **வெற்றிவேந்தன்**

ஐக்கூ-200 தொகுப்பு மலர் கிடைத்தது. அருமையாகத் தொகுத்துள்ளீர்கள் தமிழியப் பண்பாட்டிதழாகவும், இன்றைய நடைமுறையிலுள்ள அவலங்களைப் படம்பிடித்துக் காட்டும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடல் ஆசிரியர்களுக்கு எனது நன்றியும், வாழ்த்தும்! தமிழில் புதிய முயற்சியாக எடுத்து வெற்றி பெற்றும் உள்ளீர்கள். தோழர் சு முத்து அவர்களின் மதிப்புரை — பா மணம் வீசும் கொத்து மலராக எடுத்துக் காட்டியது. அவரின் திறனாய்வு வெளிப்படையான மதிப்பீட்டை அளித்தது. அவருக்கும் எனது நன்றி.

## கவிமாமன்னர் **மங்களம் இளம்பரிதி**

சட்டத்துறை, கோட்டை, சென்னை-9.

இதழில் தொகுத்தளிக்கப்பட்டுள்ள ஐக்கூ கவிதைகள் அனைத்தும் சிறப்பாக இருந்தன. ஒவ்வொரு கவிதையையும் ரசித்துப் படித்தேன்! இது ஒரு சாதனைதான்! எனது இதயங்கனிந்த பாராட்டுக்கள்! இது போன்ற தொகுப்புகள் இன்னும் வெளிவர வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

## டாக்டர் **கே. இராசிக்பாஷா**

மலையாள மாந்தரீக வைத்திய நிபுணர், ஜோலார்பேட்டை.

நாட்டிற்கு நல்ல பலன் எது என்றால் உங்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த ஏழைதாசன் இலக்கிய இதழ்தான். சாதி, மதம் பாராமல் உலக ஒற்றுமைக்கு போராடும் சிறந்த இதழ் இதுதான் என்பேன். நாட்டின் வளர்ச்சிக்கு சிறு உதவி செய்வது போல் குறைந்த விலையில் இந்தப் புத்தகம் உள்ளது என பெருமைப்பட்டு பாராட்டுகிறேன்.

## பாவலர் **கருமலைத் தமிழாழன்**, ஒசூர்

ஐக்கூ கவிதை மலர் படித்தேன் — படித் தேன்தான். எத்தனை எத்தனை எண்ணச் சிதறல்கள்... சிந்தனை ஓட்டங்கள்... கருத்துக் குவியல்கள்... உண்மையிலேயே வியந்து போனேன். அதைவிட விஞ்ஞானி சு முத்து அவர்களின் திறனாய்வு மிக அற்புதம். தமிழ் இலக்கியத்திற்கு இத் தொகுப்பு கண்டிப்பாகப் பெருமை சேர்க்கும். உங்களின் தொண்டு இலக்கிய உலகில் அழியா இடத்தைப் பெறும்.

படிப்பகம்

www.padippakam.com

**கி. விஜயகுமார்**, தினகரன் நாளிதழ், கோவை-1.

200 கவிஞர்களை ஒருங்கிணைத்து கவி இதழ் வெளியிடுவது மிக,மிக கடினமான காரியம். அதை அழகாக செய்துள்ளீர்கள். பாராட்டுக்கள்

**அனிஷ்குமார்**, பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி-24.

தங்களின் கடின உழைப்பில் வெளிவந்த ஐக்கூ தொகுப்பு கிடைக்கப்பெற்று மிகவும் மகிழ்ந்தேன். எமது ஆண்டு மலரில் விமர்சன கட்டுரை வெளியிட முயற்சிக்கிறேன். சிறப்பிதழ் சிறப்பாயிருந்தது. முத்துவின் கருத்துக்கள் மிகச் சிறப்பு. பாதுகாக்கப்பட வேண்டிய தொகுப்பு. பாராட்டிற்குரிய மிகப்பெரிய சாதனை முயற்சி.

**எஸ்.பி. அருண்**, அன்னதாசம்பாளையம், கோவை.

தங்களின் அரிய முயற்சியான ஐக்கூ-200 கிடைத்தது. ஒவ்வொன்றையும் பலமுறை படித்தேன். அருமையான தேர்வு. பல நெருக்கடிகளிலும் இருந்து மீண்டு வந்து இத்தொகுப்பை வெளியிட்டுள்ள தங்களுக்கு என் வணக்கங்கள். மேலும் இதுபோல் அரிய முயற்சிகள் பலவற்றை மேற்கொள்ள வேண்டும் என்று அன்புக்கட்டளை இடுகிறேன்.

**சி. எஸ். சாமி**, தினகரன் நாளிதழ், கோவை-1.

நீங்கள் அனுப்பிய புத்தகம் ஐக்கூ-200 கிடைத்தது மிக்க மகிழ்ச்சி. புத்தகம் மிகவும் சிறப்பாக இருக்கிறது. 200 கவிஞர்களின் ஐக்கூ கவிதைகளும் மிக சிறப்பாக உள்ளது. மேலும் இதுபோன்ற உங்கள் தமிழ் இலக்கிய பணி தொடர்ந்து வெற்றிபெற இறைவனை வேண்டு கிறேன். பிரசுரித்துள்ள கவிதைகளை நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள விதம் மிகவும் நன்றாக உள்ளது. இளைய கவிஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ஏழைதாசன் செயல்பட்டு வருகிறது. எனவே ஏழைதாசன் வளரும் இளம் கவிஞர்களின் மனதில் நீங்கா இடம் பிடிக்கும்.

**அக்கினி வீரா**, சருத்துப்பட்டி, பெரியகுளம்.

நீங்கள் அனுப்பிய தொகுப்பு கிடைத்தது. மிக சந்தோசம். அதிலும் என் கவிதை இடம் பெற்றதை பார்த்து மிக, மிக சந்தோசம் அடைந்தேன் உங்களின் இந்த முயற்சி வரலாற்றுப் பூர்வமானது. எவ்வளவோ பாராட்டத் தகுந்தது.

**செல்லம்மாள் கண்ணன்**, சென்னை-39.

ஏழைதாசன் ஐக்கூ-200 கண்டேன். நேர்த்தியான தேர்வு! அற்புதமான பதிவு! என்றே கூறலாம் அதே சமயத்தில் சமூகப்பார்வை என்ற போர்வையில் இடம்பிடித்த ஐக்கூகள் பெரும்பாலும் ஐக்கூவின் சூட்சமத்தை குறைந்த பட்சம்கூட பயன்படுத்தவில்லை. இது எனது தனிப்பட்ட கருத்து.

பாவலர் **கருமலை பழம் நீ**, சென்னை-39.

மிகவும் சிறப்பாக தொகுக்கப்பட்டுள்ள ஐக்கூ-200, தங்களின் சாதனைக்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டு என்பேன். தமிழறிஞர் நெல்லை சு. முத்து அவர்களின் அணிந்துரை, நூலுக்கு மணிமகுடமாய்த் திகழ்கிறது மிகச் சிறந்த பணி இது என்பேன். பாராட்டுக்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# "வாஜ்பாயே பாராட்டுவார்"

பொறிஞர். தாமல். கண்ணன்
இருமொழிக் கவிஞர்
பெங்களூர் - 560 038.

நெல்லை சு. முத்துவின் ஐக்கூ யாப்பு சிறப்பாக உள்ளது. ஜப்பானில் பிறந்தாலும் இந்த நூற்றாண்டை கொண்டாடப்போவது ஐக்கூ மட்டுமே ஏனெனில் மக்களுக்கு காவியங்கள் படிக்க நேரமில்லை. மரபை முறிப்பதில் எல்லோருக்கும் ஆசை.

தமிழ்க் கவிஞர்களின் ஐக்கூ சிந்தனை என்னை வியக்க வைத்தது - மலைக்க வைத்தது. எவ்வளவு விதமான சிந்தனைகள்! முத்து எழுதிய வண்ணம் சில ஐக்கூ ஏற்கனவே படித்தவை போலுள்ளது.

அமுதபாரதியின் "அந்தக் காட்டில் / எந்த மூங்கில் / புல்லாங்குழல்?" போன்றவை. சிந்தனை ஒன்று போலுள்ளது. "பகலில் சூரியன் / இரவில் நிலா / தங்கிட ஒரே கிணறு!' 'ஒரே நேரத்தில் / ஆயிரம் குளங்களில் குளிக்கிறாள் / நிலவுப்பெண்!" கவிஞர் வேறு; வாழும் ஊர் வேறு. ஆயினும் சிந்தனை ஒன்றாவது விந்தைதான்!

"கசக்கி எறிந்த காகிதம் / காயம்பட்டன / எனது கவிதைகள்!" — இந்தக் கவிதை எப்போதோ எங்கேயோ படித்த ஞாபகம். சில அரசியல் நையாண்டி ஐக்கூ — சிந்தனையை கிளறுகிறது. "நித்திய கண்டம் / பூரண ஆயுசு / வாஜ்பாய் அரசு!"— எவ்வளவு எதார்த்தமான ஐக்கூ இது. இந்தியில் மொழிபெயர்த்தால் வாஜ்பாயேகூட பாராட்டுவார். ஆனால் ஐக்கூ இலக்கணம் வரவேண்டுமே!

சில ஐக்கூ புரியவேயில்லை. உதாரணம் "சிப்பிக்குள் / அலைந்துகொண்டே இருக்கிறது... / அலையின் உயிர்!" ஆயினும் உங்கள் முயற்சி உலகெங்கிலுமுள்ள தமிழர்களால் பாராட்டப்பட வேண்டியது எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பீர்கள் என எண்ணி வியக்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

# ஆதித்தனார் பிறந்தநாள்
# இலவச மருத்துவ முகாம்





காரைக்குடி, செப். 27—

தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் 97-வது பிறந்த நாளை முன்னிட்டு அப்துல்லா மிஷன் அறக்கட்டளையும் நாகை மாவட்டம் தேவூர் டாக்டர் சிவந்தி ஆதித்தனார் நற்பணி மன்றம் இணைந்து இலவச அக்குபஞ்சர், மூலிகை, யோகாசன மருத்துவ முகாமை காரைக்குடி பெரியார் சிலை அருகிலுள்ள அப்துல்லா மருத்துவமனையில் நடத்தியது.

அக்குபஞ்சர் சிகிச்சையை மருத்துவர்கள் அப்துல்லா சேகு, சிங்கம்புணரி வர்மாசம்பந், மானாமதுரை பாண்டியன் ஆகியோர் அளித்தார்கள்.

மூலிகை சிகிச்சையை தேவூர்ஜி மணிவாசகனும், யோகாசன செயல் விளக்கத்தினை தஞ்சை யோக மன்னர் சிவாஜிபாலன் அளித்தார்கள்.

முகாம் ஏற்பாடுகளை நிர்வாக இயக்குநர் பசீர் சிறப்பாக செய்திருந்தார்.

எல்லா நாளிதழ்களும் முகாம் செய்திகளை புகைப் படத்துடன் சிறப்பாக வெளியிட்டிருந்தன.

படிப்பகம்

www.padippakam.com

# துளி துளியாய்...

- எந்த ராஜ்ஜியத்தைப் பிடிக்க
இவ்வளவு நட்சத்திரப் படைகளோடு
போகிறது நிலா?

- இரஜகை நிலவன்
தானே, மும்பை

- மூடத்தனத்திற்கு
முதற்பலி
சக்கரத்தில் எலுமிச்சை!

- தி.ப. சண்முகம்
திருக்காடுதுறை, கரூர்

- காப்பாற்றும் பிள்ளையார்க்கு
ஊர்வலத்தில்
காவல்துறையும் துப்பாக்கிகளும்!

- பொன்னியின்செல்வன்
திருச்சி-14


- அர்த்தராத்திரியில்
வளையல் சத்தம்
உறக்கம் கலைந்தாள் முதிர்கன்னி!

- கா. ராஜ்குமார்
மதுரை-2

படிப்பகம்

www.padippakam.com

# சிறிய கையெழுத்து இதழ்!
# அரிய மெய்யெழுத்து இதழ்!



1977-ல் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் புதுமுக வகுப்பு (P.U.C.) படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே தாழம்பூ இதழைத் தொடங்கினார். அதில் ஒரு பிரதியை பிலிப்பைன்ஸ் வானொலிக்கு அனுப்ப — அப்போது அறிவிப்பாளராக பணிபுரிந்த ரபி பெர்னார்ட் தாழம்பூ பற்றி விமர்சனம் செய்தார். அது இவரை மிகவும் உற்சாகப்படுத்தியது. அதன் பிறகு கார்பன் பேப்பர் வைத்து நிறைய பிரதிகள் எடுத்து கடிதம் எழுதியவர்களுக்கு அனுப்பி வந்தார் அக்காலத்தில் ஜெராக்ஸ் என்ற சாதனம் வரவில்லை. பிறகுதான் இச்சாதனம் அறிமுகமானது.


பின்னர் 100 பிரதிகள் எடுத்து வெளியிட ஆரம்பித்தார். 100-வது இதழ் மட்டும் அச்சில் வெளிவந்தது. அதில் கவிஞர் மேத்தாவின் பேட்டி இடம் பெற்றது. 1998-ல் கன்னியாகுமரி உதயதாரகை கலைக் கழகம் சிறந்த சிற்றிதழாக தாழம்பூவைத் தேர்வு செய்தது. 2000-ல் தமிழ்ச் சிற்றிதழ்ச் சங்கம் (கோவை) சிறந்த சிற்றிதழ் ஆசிரியராக இவரை தேர்வு செய்திருந்தார்கள். எனினும் ஒவ்வொரு இதழையும் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில்தான் வெளியிடுகிறார். ''தனது குழந்தைகளுக்கு தின்பண்டம் வாங்கி கொடுக்கும் காசுகூட இதழ் நடத்த தேவைப்படுகிறது மனைவிக்கு நல்ல புடவைகூட எடுத்துத்தர முடியவில்லை'' என்கிறார்.

உலக வானொலி நேயரான எம்.எஸ். கோவிந்தராஜன், ஒரு சிறந்த மருத்துவருமாவார். தாத்தா முத்தையா, தந்தை சுப்பிரமணியன், மனைவி கோ. மாதவி ஆகியோரும் மருத்துவர்களே! 42 வயதான இவர், 4-வது தலைமுறையாக பரம்பரை வைத்தியம் செய்யும் பெருமைக்குரியவர். இரண்டு மகன்கள், ஒரு பெண்ணும் உள்ளார்கள். ''தபால் செலவு எக்கச்சக்கமா ஏறிட்டுப் போகுது. நகலச்சு செலவு வேறு அதிகம். விளம்பரம் போடச் சொல்லுவாங்க. கட்டணம் கேட்டா இந்தா தரேன் அந்தா தரேன் என்று அலைய விடுவாங்க. ஒருசில பேர்தான் உற்சாகப் படுத்துறாங்க. ஒருசிலர் வெட்டித்தனமான வேலை என்பார்கள். இதையெல்லாம் இதயத்தில் தாங்கிக் கொண்டுதான் இதழ் நடத்துகிறோம்'' என வெளிப்படையாக பேசினார்

டாக்டர் எம்.எஸ். கோவிந்தராஜன்,
விஜயபுரம் - வடக்கு,
சுப்பிரமணியபுரம் - 614 805.
அறந்தாங்கி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

படிப்பகம்

www.padippakam.com



**இருநூறு கவிஞர்களின் இருநூறு ஹைக்கூவுடன் வந்திருக்கும் 'ஏழை தாசன்' மே - ஜூன் சிறப்பிதழில் நான்கு கவிதைகள் எனக்கு ஹைக்கூ அனுபவம் தந்தன :**

பகலில் சூரியன்
இரவில் நிலா
தங்கிட ஒரே கிணறு

பொன். குமார், சேலம்-6

இரண்டு லாரிகள் மோதல்
இரண்டின் முகப்பிலும்
அம்மன் துணை

நாகை ஆசைத்தம்பி, கோவை-11

ஐயனார் தோளில் அமர்ந்து
வாலை ஆட்டும்
குருவி

வலம்புரி லேனா, திருவாலம்பொழில்

கயிற்றில் நடப்பவன்
கவனம் முழுவதும்
காலி டப்பாவில்

கி. செல்வக்குமரன், திருப்பூர்

இதழிலே சிறந்த (சற்றே திருத்திய) இந்த ஹைக்கூவுக்குப் பாராட்டுக்கள்.

**- சுஜாதா**

(கற்றதும்... பெற்றதும்... 24-வது தொடர்)

**நன்றி : ஆனந்த விகடன் 30-9-01.**

படிப்பகம்

www.padippakam.com



# பிரபா மருத்துவ மையம்

## (PRABHA MEDICAL CENTRE)

### பரம்பரை வைத்திய முறை



நான்கு தலைமுறையாக கீழ்க்காணும் நோய்களுக்கு சிறந்த முறையில் (சித்த வைத்தியம் மற்றும் ஹோமியோபதி வைத்தியம்) சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

தீராத தலைவலி, வயிற்றுவலி (அல்சர்), வாய்வு, வாதம், சூலை வாய்வு, மூட்டுக்கு மூட்டு வலி, தலைமுடி உதிர்தல், புழுவெட்டி.

நீண்ட காலமாக குழந்தையில்லாமை, ஆண்மைக்குறைவு, தோல் நோய்கள், தோல் அரிப்பு, சொறி, சிரங்கு (நாள் பட்டது) புறப்பாடு, கட்டு, சர்க்கரை நோய் (சுகர்), ஆறாத புண்கள், காதில் சீழ்வடிதல்.

பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை படுதல், மாதவிலக்கு காலங்களில் ஏற்படும் வயிற்றுவலி, இடுப்பைச் சுற்றி ஏற்படும் படை, வெண் குஷ்டம்.

எய்ட்ஸ் போன்ற பால்வினை நோய்கள்.

அணுகவும் :

**டாக்டர் எம். எஸ். கோவிந்தராஜன் / டாக்டர் கோ. மாதவி**

விஜயபுரம் - வடக்கு. எட்டித்தளி.

அறந்தாங்கி வட்டம், புதுக்கோட்டை - மாவட்டம்.

படிப்பகம்

www.padippakam.com

EALAIDHASON ★ TAMIL MONTHLY ★ RNI. Regd. No. 55308 / 92
R.C.No. 22449 / 98 ✶ Regd.No. PMG / CR / 01 / 2001 / PDK

# ஏழைதாசன்

✶ ஆண்டுக் கட்டணம் : ரூ. 35/-
✶ வாழ்நாள் கட்டணம் : ரூ. 350/-

● 26, அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை - 622 002.

☐ E. Mail : ealaidhason@hotmail.com
☐ Internet : http // www.ealaidhason.8m.com

(கட்டணம் செலுத்தாதவர்க்கு இதழ் நிறுத்தப்படும். தொகையை பணவிடை, காசோலை, வரைவோலை மூலம் செலுத்தலாம். படைப்பாளர்கள் இதழ் பரவ, வளர உதவலாம். நல்லெண்ணத்துடன் முகவராக செயல்பட விருப்பம் உள்ளவர்கள் தொடர்புறுக. வெளிநாட்டுத் தமிழன்பர்கள் இதழ் கிடைத்ததை உறுதிபடுத்த வேண்டுகிறோம்.)

பெறுநர் திரு.

ஏழைதாசன் அச்சகத்தில் அச்சிட்டு,
வெளியிடுபவர், ஆசிரியர் : எஸ். விஜயகுமார்.
முகவரி : 26, அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை 622 002, தமிழ்நாடு

படிப்பகம்